DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 55/2017

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW4

| | | |
|---|---|---|
| Name | : | சேதுராஜா |
| Father/Husband Name | : | வீராச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது இ,ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2ம்நிலை கணக்கராக வேலை பார்க்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சி சம்மனில் சொல்லப்பட்டுள்ள நிலப்பதிவேட்டு நகல் எங்கள் அலுவலகத்தில் இல்லை. SLR அ. பதிவேடு இல்லை. 1919 வருடத்திற்குண்டான அ. பதிவேடு கொண்டுவந்துள்ளேன். அதன் நகல் Ex X6. அதில் சர்வே நம்பர் 244/1 என்பது தரிசு என்று தான் உள்ளது. நிலஉடைமை மேம்பாடு பதிவேடு கொண்டு வந்துள்ளேன்.

**<u>2, 3 மற்றும் 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

Ex X6 பதிவேடு 23.03.1919 ந்தேதி தனி உதவி செட்டில்மென்ட் அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பதிவு உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.பதிவேடு ரெஜிஸ்டரில் பட்டா தாரர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இராமநாதபுரத்தில் 1900 முதல் 1922 வரை சமஸ்தானப்பட்டா

வருடத்திற்கு ஒரு பட்டா கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு 1956 ல் இராமநாதபுரத்தில் செட்டில்மென்ட் சர்வே நடந்தது என்றால் சரிதான். 1956 ம் வருடம் இராமநாதபுரத்தில் செட்டில்மென்ட் சர்வே நடந்தற்கு அதற்குரிய அலுவலர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டன என்றால் சரிதான். அதன் பிறகு 1973 ல் இராமநாதபுரத்தில் பட்டா பாஸ்புக் கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி தெரியாது. UDR திட்டம் 1984 ல் சர்வே செய்யப்பட்டு 1994 ல் முடிவடைந்தது என்றால் சரிதான். காஞ்சிரங்குடி கிராமத்தில் இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் 1987 ல் சர்வே செய்து முடிக்கப்பட்டு அதற்குரிய அதிகாரிகளிடம் ஒப்புதல் வாங்கப்பட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**18, 19, 21 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

மறு விசாரணை

Ex X6 ல் எந்த காலத்திலும் பட்டாதாரர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காஞ்சிரங்குடி கிராத்திற்குண்டான செட்டில் மென்ட் சர்வே நடந்து அதற்குரிய அலுவலர்களிடம் உத்தரவு பெறப்பட்டது என்பதற்குண்டான ஆவணம் எங்கள் அலுவலகத்தில் இல்லை.